மூன்றாவது கூடுதல் சார்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி

முன்னிலை : **திரு.ஜெ.கண்ணன்., M.A., B.L., D.L.T.,**

மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி, திருச்சிராப்பள்ளி

2026-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09-ஆம் நாள் வியாழக் கிழமை

மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2017

மற்றும்

இடைநிலை மனு எண். 1/2020

இன்

மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2017

(CNR No.TNTP04-01773-2017)

இடைநிலை மனு எண்.1/2020 இன் மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2017

1. M/s Muythoot Finance Ltd.,
கன்டோன்மெண்ட், திருச்சி - 01.

2. கிளை மேலாளர்,

M/s Muythoot Finance Ltd.,
கன்டோன்மெண்ட், திருச்சி - 01. ... மனுதாரர்/ மேல்முறையீட்டாளர்

//எதிராக//

முகம்மது இக்பால் ... எதிர்மனுதாரர்/எதிர்மனுதாரர்

மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2017

1. Muthoot Finance Manager

2. Muthoot Finance Branch Manager ...
மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி

/எதிராக/

முகமது இக்பால் ... எதிர்மனுதாரர்/வாதி

(இம்மேல்முறையீடு திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் அ.வ.எண்.1433/2013 -ல் கடந்த 09.03.2017-ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது)

இடையே

அ.வ.எண். 1433/2013

முகமது இக்பால் ... வாதி

//எதிராக//

1. Muthoot Finance Manager
2. Muthoot Finance Branch Manager ...பிரதிவாதிகள்

இம்மேல்முறையீடு மற்றும் இடைநிலை மனு எண்.1/2020 என் முன்னர் கடந்த 02.04.2026-ம் தேதி அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் மற்றும் மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.S.P.கணேசன், அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் மற்றும் எதிர்மேல்முறையீட்டாளர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.W.ராஜேஷ், அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை

கேட்கப்பட்டும், சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை இதுநாள்வரை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றத்தால் பகரப்படும்,

உத்தரவு

இந்த மனுவானது பிரிவு 41, விதி 27 உரிமையியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் கூடுதல் ஆவணங்கள் தாக்கல் செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தீர்ப்புரை

திருச்சிராப்பள்ளி, முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தால் அ.வ.எண்.1433/2013-ல் கடந்த 09.03.2017-ம் தேதியன்று பிறப்பிக்கப்பட்ட தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணையில் குறைவுற்ற பிரதிவாதி இந்த மேல்முறையீட்டை தாக்கல் செய்துள்ளார். இம்மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளர் பிரதிவாதியாகவும், எதிர்மேல்முறையீட்டாளர் வாதி ஆவார்கள்.

விசாரணை நீதிமன்றத்தில் அசல் வழக்கானது தாவா சொத்து விபரத்தில் கண்டுள்ள நகைகளை சட்டத்திற்கு புறம்பான வகையில் பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ ஏலம் விடக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், தாவா சொத்தில் கண்டுள்ள நகைகடன்கள் தொடர்பாக வட்டி விகித கணக்கீட்டு விபரங்களை வாதிக்கு வழங்க பிரதிவாதிக்கு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத் தொகைக்காகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. இ.ம.எண்.1/2020 இன் மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2017 மனு சுருக்கம்

மனுதாரர் கீழமை நீதிமன்றத்தில் 2ம் பிரதிவாதி. எதிர்மனுதாரர்/வாதி மனுதாரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்துள்ளார். கீழமை நீதிமன்றம் வாதி தரப்பு சாட்சி1ன் குறுக்கு விசாரணையை கவனிக்க தவறிவிட்டது. அவர் ஒரு வாடிக்கையாளர். நகைகளை பிரதிவாதிகளிடம்

அடமானம் வைத்திருந்தார். அந்த கடனை பொறுத்தவரை வாதி வட்டி மற்றும் அசலுக்காக ஒரு பைசா கூட செலுத்தவில்லை. எதிர்மனுதாரர்/வாதி முழு அசல் தொகையையும் வட்டியுடன் செலுத்த தயாராக இருப்பதாக கூறியபோதிலும் வழக்கு தொடரப்பட்ட சமயத்திலோ அல்லது வழக்கின் விசாரணையின்போதோ தொகையை நீதிமன்றத்தில் செலுத்த முன்வரவில்லை என்பதை கீழமை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது. மேல்முறையீட்டாளர் எந்த கணக்கு நகலையும் தாக்கல் செய்யவில்லை என்ற அடிப்படையில் வழக்கில் தீர்ப்பளித்தது. பிரதிவாதி நகைகடன் ரசீதுகளிலேயே வட்டி விகிதத்தை தெளிவாக குறிப்பிட்டிருந்தார். தற்போது மனுதாரர் வாதியின் அனைத்து கடன் கணக்கு விவரங்களும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கூடுதல் ஆவணங்களை பெற அனுமதிக்காவிடில் மனுதாரருக்கு பெரும் கஷ்ட நஷ்டம் ஏற்படும். எனவே மனுவை அனுமதிக்க வேண்டும்.

3. எதிர்மனுதாரர் தரப்பு எதிருரையின் சுருக்கம்

மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய்யானவை.கீழமை நீதிமன்றம் வழக்கின் தகுதி மற்றும் ஆவணங்களை முழுமையாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்கியுள்ளது என்றும், மனுதாரர்/மேல்முறையீட்டாளர் விசாரணையின்போது கணக்கு விபரங்களை சமர்ப்பிக்க தவறியதோடு அந்த குறையை நிரப்புவதற்காக தற்போது ஒரு கணக்கு விபரத்தை உருவாக்கியுள்ளார் என்றும், மனு காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும்.

4). <u>அசல் வழக்குரையின் சுருக்கம் :-</u>

வாதி தனது குடும்பத்தாரின் 85.5 கிராம் எடை கொண்ட நகைகளை அத்தியாவசியத் தேவைகளுக்காக ரூ.1,50,000/- த்திற்கு கடந்த 05.05.2012ம் தேதி 2ம் பிரதிவாதியின் பைனான்ஸ் நிறுவனத்தில் கடன் எண்.2571ல் அடமானம் வைத்து அத்தியாவசிய தேவைகளை தீர்த்துக் கொண்டார். அதேபோல் 03.09.2012ம்

தேதியன்று கடன் எண்.3305ன்படி 175 கிராம் எடை கொண்ட நகைகளை ரூ.3,40,000/-த்திற்கும், கடன் எண்.3306 மூலம் 131.70 கிராம் நகைகளை ரூ.2,71,000/-த்திற்கும் அடகு வைத்தார். மேற்படி கடனுக்கு வாதி வட்டியை முறையாக செலுத்திவந்தார். அதற்கு ரசீது கொடுக்கும் பழக்கம் 2ம் பிரதிவாதிக்கு இல்லை. வாதி தாவா நகைகளின் பெயரில் அசல் தொகை மற்றும் வட்டியை செலுத்த தயாராக இருந்தும் பிரதிவாதிகள் கடந்த ஆறு மாதங்களாக நகைகடன் பெயரிலான எந்த ஒரு தகவலையும் தெரிவிக்காமல் வட்டியை வசூல் செய்வதிலேயே குறியாக இருந்தனர். இந்நிலையில் கடந்த 09.11.2013ம் தேதியன்று தாவா 1ம் அயிட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நகைகளை ஏலம் விட இருப்பதாகவும், அசல் மற்றும் வட்டித் தொகை ரூ.2,18,798/- நிலுவையில் இருப்பதாகவும் அறிவிப்பு 2ம் பிரதிவாதியால் வாதிக்கு சார்வு செய்யப்பட்டது. மேற்படி அறிவிப்பை பெற்றுக்கொண்ட வாதி உடனடியாக பிரதிவாதியின் அலுவலகத்திற்கு சென்று விபரம் கேட்டபோது மொத்த தொகையையும் எடுத்துக்கொண்டு 19.11.2013ம் தேதியன்று அலுவலகத்திற்கு வருமாறும் அப்பொழுது உரிய கணக்கிட்டு விபரத்தை தருவதாக பிரதிவாதியின் அலுவலர்கள் வாக்குறுதி அளித்தனர். ஆனால் ஏலத்தை நிறுத்துவதாகவோ அல்லது நடத்தப்படாது என்றோ உறுதிபட தெரிவிக்க மறுத்துவிட்டனர். வாதி நகைகளின் பெயரிலான நிலுவையில் உள்ள வட்டி மற்றும் அசல் தொகையை செலுத்த தயாராக இருந்தும் பிரதிவாதிகள் முறையான கணக்கீட்டு விவரங்களை வாதிக்கு தர மறுத்து, நகைகளை மொத்தமாக ஏலம் விடவேண்டுமென்ற எண்ணத்தில் சட்டத்திற்கு புறம்பான வகையில் இந்திய ரிசர்வ் வங்கியால் நிர்ணயிக்கப்பட்ட வட்டி விகிதங்களை விட மோசமான வட்டி விகிதங்களை பின்பற்றிக்கொண்டு தொழில் நடத்தி வருகின்றனர். வாதி தாவா சொத்தில் கண்டுள்ள நகைகளை காப்பாற்றிக் கொள்வதற்காகவும் உரிய கணக்கீட்டு விவரங்களை பெறுவதற்காகவும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

<u>5). 2ம் பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 1ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>

வழக்குரை சங்கதிகளில் பிரதிவாதிகளால் ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர இதர சங்கதிகள் உண்மையல்ல என்று மறுக்கப்படுகிறது. தாவா சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல. பிரதிவாதிகளின் கிளைகள் மண்டல அலுவலகத்தின் கட்டுப்பாட்டில் இயங்கி வருகிறது. இந்நிலையில் கிளை மேலாளர் பெயரில் மட்டும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு நிலைக்கத்தக்கதல்ல. வாதி 2ம் பிரதிவாதியின் கிளையில் தான் நகை கடன் பெற்றுள்ளார். 1ம் பிரதிவாதிக்கும் வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை. பிரதிவாதி நிறுவனம் வங்கி சாரா நிறுவனம் (Non banking financial company) ஆகும். இந்திய ரிசர்வ் வங்கியின் அறிவுரைகளின்படி பிரதிவாதி கம்பெனி நடந்து வருகிறது. வாதி 05.05.2012ம் தேதியன்று 85.5 கிராம் தங்க நகைகளை கடன் எண்.2571ல் அடமானம் வைத்து ரூ.1,50,000/- பெற்றுக்கொண்டு அதை 19% வட்டியுடன் திருப்பி அடைக்க ஒப்புக்கொண்டதாக வழக்குரை பாரா 2ல் சொல்லியுள்ளது ஒப்புக்கொள்ளப்படுகிறது. மேலும் வாதி கடன் எண்.3305 மற்றும் 3306 குறித்து சொல்லியுள்ளதும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. வாதி நகை கடன்களுக்காக வட்டி செலுத்தி வந்ததாகவும், பிரதிவாதி அதற்கு ரசீது கொடுப்பதில்லை என்றும் சொல்லியுள்ளது முற்றிலும் பொய் என மறுக்கப்படுகிறது. வாதி கடன் பெற்ற பிறகு வட்டியோ அசலோ எந்த தொகையும் செலுத்தவில்லை என்றும், 06.11.2013ல் பிரதிவாதியை அணுகியதாக சொல்லியுள்ள வாதி எந்த கிளையை அணுகினார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை. வாதி உண்மையில் கடனை செலுத்துவதாக இருந்தால் ஏல அறிவிப்பு முன்னரே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியிருப்பார். ஆனால் ஏல அறிவிப்புக்கு பின்னரே வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளார். மேலும் ஏல நாள் 09.11.2013 என்றும், கடன் நிலுவை தொகை ரூ.2,18,098/- என்றும் வழக்குரையில்

சொல்லியுள்ளது தவறு. ஏல நாள் 19.11.2013 என்றும் கடன் நிலுவை தொகை ரூ.2,12,798/- என்றும் ஏல அறிவிப்பில் சொல்லப்பட்டுள்ளது. வாதி கடன் பெற்று அதன் பலனை அடைந்துவிட்டு தற்சமயம் கடனை அடைக்க மறுப்பது சரியல்ல. இவ்வழக்கிற்கு வழக்குமூலம் ஏற்படவில்லை. எனவே, வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

6). விசாரணை நீதிமன்றத்தில், வாதி தரப்பில் வாதி முகமது இக்பால் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் வாயிலாக வா.சாஆ.1 முதல் வா.சா.ஆ.6 சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் 2 ம் பிரதிவாதி கிளை மேலாளர் பாலாஜி என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சான்றாவணம் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7) இம்மேல்முறையீட்டின் வசதியை கருதி இம்மேல்முறையீட்டில் மேல்முறையீட்டாளர் பிரதிவாதி என்றும், எதிர்மேல்முறையீட்டாளரை வாதி என்றும், அசல் வழக்கில் அழைத்தவாறே இனி அழைக்கப்படுவர்.

8). இம்மேல்முறையீட்டிற்கான காரணங்கள்:-

1. விசாரணை நீதிமன்ற தீர்ப்பு மற்றம் தீர்ப்பாணை தவறானது என்றும், விசாரணை நீதிமன்றம் வாதி தரப்பு சான்றாவணம் Ex.A1 முதல் Ex.A3 வரையிலான ஆவணங்களை கவனிக்க தவறிவிட்டது.

2. விசாரணை நீதிமன்றம் வாதி தரப்பு சாட்சி 1ன் குறுக்கு விசாரணையை கவனிக்க தவறிவிட்டது. அவர் ஒரு வாடிக்கையாளர். நகைகளை பிரதிவாதிகளிடம்

அடமானம் வைத்திருந்தார். அந்த கடனை பொறுத்தவரை வாதி வட்டி மற்றும் அசலுக்காக ஒரு பைசா கூட செலுத்தவில்லை. வாதி ஒரு முதுகலை பட்டதாரி.

3. கடன் வழங்கும் முறை முற்றிலும் கணினி மயமாக்கப்பட்டுள்ளது. இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதலின்படி வட்டி விகிதம் உருவாக்கப்படுகிறது. மேலும் ஒரு வங்கி சாரா நிதி நிறுவனம் என்ற வகையில் மேல்முறையீட்டாளர் இந்திய ரிசர்வ் வங்கியின் ஒப்புதலுடன் வட்டி விகிதத்தை தானாக நிர்ணயிக்க அதிகாரம் பெற்றுள்ளார்.

4. மூன்று கடன்களில் கடன் எண்.0002571 மட்டுமே ஏல அறிவிப்பு பிரதிவாதிக்கு அனுப்பப்பட்டது என்பதை கீழமை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது.03.09.2012 தேதியிட்ட கடன் எண்.3305, 3306 கடன்களை இதில் சேர்த்துள்ளார். அவற்றிற்கு எந்த வட்டியும் செலுத்தவில்லை.

5. முழுத் தொகையும் செலுத்த எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளரை அணுகியபோது எதிர்மனுதாரரின் கூற்றுக்கு எந்த அடிப்படையும் இல்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது. எதிர்மனுதாரர்/வாதி வட்டி செலுத்தியபோதும் கணினியில் கோளாறு இருந்தால் மேல்முறையீட்டாளர் ரசீது வழங்க மறுத்தபோதும் அவரது கூற்றுக்கு எந்த அடிப்படையும் இல்லை.

6. பிரதிவாதி முழு அசல் தொகையும் வட்டியும் செலுத்த தயாராக இருப்பதாக கூறியிருந்தபோதிலும் வழக்கு தொடரும்போதோ அல்லது வழக்கின் விசாரணையின்போதோ அந்த தொகையை செலுத்த முன்வரவில்லை என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது.

7. 1ம் பிரதிவாதி ஒரு தேவையற்ற தரப்பினர் என்பதை விசாரணை நீதிமன்றம் கவனிக்க தவறிவிட்டது. 2ம் பிரதிவாதி மட்டுமே நகை கடன் வழங்கியுள்ளார். தவறாக தரப்பினர் சேர்க்கப்பட்டிருந்தால் வழக்கு நிலைக்காது.

8. மேல்முறையீட்டாளர் எந்த கணக்கு நகலையும் தாக்கல் செய்யவில்லை என்ற அடிப்படையில் விசாரணை நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. பிரதிவாதி கடன் ரசீதுகளிலேயே வட்டி விகிதத்தை தெளிவாக குறிப்பிட்டிருந்தார். மேலும், இந்திய ரிசர்வ் வங்கி விதிமுறைகளின்படி கடன் விவரங்கள் கணினிமயமாக்கப்பட்டுள்ளன. எதிர்மனுதாரர்/வாதி ஒரு வழக்கமான வாடிக்கையாளர் என்பதால் வட்டி மற்றும் தொகையின் விபரங்கள் முழுமையாக தெரியும்.

9. இந்த மேல்முறையீட்டினை செலவுத் தொகையுடன் அனுமதித்தும், விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணையை நீக்கரவு செய்தும், மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி வழக்கில் கோரியுள்ளபடி வழக்கினை முழுவதுமாக அனுமதித்து தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்க வேண்டுமாய் மேல்முறையீட்டாளர்/பிரதிவாதி பக்கம் வணக்கமாய் பிராத்திக்கப்படுகிறது.

9). இம்மேல்முறையீட்டில் தீர்வு காண வேண்டிய சங்கதி யாதெனில்?

1.வாதி கோரியுள்ளவாறு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

2.வாதி கோரியுள்ளவாறு செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதா?

3. கடந்த 09.03.2017-ம் தேதியில் அ.வ.எண்.1433/2013 வழக்கில் விசாரணை நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை ரத்து செய்யத்தக்கதா?

4. வேறு என்ன பரிகாரம்?

10). <u>எழுவினா 1 முதல் 3 ற்கான தீர்வு</u>

1. உபய தரப்பினர்களின் வாதுரைகள் பரிசீலனை செய்யப்பட்டன. அசல் வழக்கானது நிரந்தர உறுத்துக்கட்டளை மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், வாதி 2ம் பிரதிவாதி கிளையில் மூன்று தங்க நகைகள் அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார் என்றும், அசலுக்காகவும், வட்டிக்காகவும் எந்த தொகையும் செலுத்தவில்லை என்றும், கடன் விபரங்கள் கணினி மயமாக்கப்பட்டுள்ளதால் வட்டி விகிதங்கள் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல் படி வட்டி விகிதம் கணக்கிடப்படுகிறது என்றும், மூன்று நகை கடன்களில் ஒருகடனுக்கு மட்டும் ஏல அறிவிப்பு வாதிக்கு சார்வு செய்யப்பட்டது என்றும், மற்ற இரண்டு கடன்களுக்கு வட்டி செலுத்தவில்லை என்றும், வாதி கடன் தொகையை திரும்ப செலுத்த வந்தபோது அதை பிரதிவாதி மறுத்ததாக கூறியுள்ளது தவறானது என்றும், வாதி செலுத்த வேண்டிய அசல் வட்டி தொகையை நீதிமன்றத்தில் வைப்பீடு செய்யவில்லை என்றும் வாதுரை செய்தார்.

2. வாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதுரையில், வாதி மூன்று நகை கடன்கள் 2ம் பிரதிவாதி நிறுவனத்தில் வைத்துள்ளது ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், மேற்படி கடன்களுக்கு தொகை செலுத்தப்பட்டு ரசீது கொடுக்கும் வழக்கம் இல்லை என்றும், அதிக வட்டி வசூல் செய்து வருவதாகவும், நகைகளை மீட்க வட்டி மற்றும் கணக்கு விபரத்தை கேட்டு பிரதிவாதிகள் கொடுக்கவில்லை என்றும், கணக்கீட்டு விபரத்தை கொடுக்காமல் நகைகளை ஏலம் விடப்போவதாக அறிவிப்பு அனுப்பியதால் இவ்வழக்கை தாக்கல் செய்ததாக வாதுரை செய்தார்.

3. இம்மேல்முறையீடு நிலுவையில் இருந்தபோது, மேல்முறையீட்டாளர் தரப்பில் மூன்று நகைக் கடன்களுக்கான கணக்கீட்டு நகல்கள் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை இந்நீதிமன்றம் கவனமாக பரிசீலனை செய்தபோது வாதி 05.05.2012 தேதியில் கடன் எண்.2571 படி ரூ.1,50,000/-மும் 03.09.2012 ல் கடன் எண்.3305, 3306 படி தலா ரூ.3,40,000/-, ரூ.2,71,000/- கடன் பெற்றுள்ளார். மேற்படி கடன்களுக்கு உரிய வட்டி கணக்கீடு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை நீதிமன்றத்தில் 2 ம் பிரதிவாதி கணக்கீடு விபரங்களை தாக்கல் செய்யாமல் உள்ளது சந்தேகத்திற்குரிய வகையில் உள்ளது என்றும், அதற்கான காரணங்களை 2 ம் பிரதிவாதி கூறவில்லை என்றும், அதனால் வழக்கை அனுமதித்து தீர்ப்பளித்துள்ளது. தற்போது பிரதிவாதி தரப்பில் மேற்படி கடன்களுக்கு உரிய வட்டி கணக்கீட்டு புத்தகம் மற்றும் கடனுக்குரிய கணக்கீட்டு விபரங்களை தாக்கல் செய்துள்ளார். மேற்படி பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள இடைமனு எண்.1/2020 அனுமதிக்கப்படுகிறது. மேற்படி ஆவணங்களில் கண்டுள்ள சங்கதிகள் மற்றும் வட்டி விகிதம் தொடர்பாக வாய்மொழி சாட்சியங்கள் விடப்பட்டு குறுக்கு விசாரணை செய்தால் மட்டுமே உண்மை சங்கதிகள் தெரிய வரும். அதனடிப்படையில் இவ்வழக்கை மீண்டும் விசாரணை நீதிமன்றத்திற்கு திருப்பி அனுப்பி பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள ஆவணங்களை குறியீடு செய்தும் இருதரப்பிற்கும் கூடுதல் சாட்சியத்திற்கு அனுமதி அளித்து வாதிக்கு மேற்படி ஆவணங்கள் தொடர்பாக குறுக்கு விசாரணைக்கு வாய்ப்பு வழங்கி முடிவு செய்வதே நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

4. இவ்வழக்கானது விசாரணை நீதிமன்றத்திற்கு இருதரப்பு கூடுதல் சாட்சியத்தை விசாரிக்க மட்டுமே திரும்ப அனுப்பப்படுகிறது. புதிதாக விசாரணை செய்வதற்காக

அல்ல. அதனடிப்படையில், இம்மேல்முறையீட்டில் பிரதிவாதி தரப்பில் எடுக்கப்பட்ட கட்சிகளை பொறுத்து இந்நீதிமன்றம் விரிவாக அலசி ஆராயவில்லை. அவ்வாறு ஆய்வு செய்தால் விசாரணை நீதிமன்ற விசாரணையில் பாதிப்பை ஏற்படுத்தும் என இந்நீதிமன்றம் கருதுகின்றது.

5. எனவே, இவ்வழக்கை மீண்டும் விசாரணை நீதிமன்றத்திற்கு மேற்படி காரணங்களுக்காக விசாரணை மேற்கொள்ள திருப்பி அனுப்புவது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என இந்நீதிமன்றம் முடிவு செய்து, எழுவினாக்களுக்கு அவ்வாறே விடை காண்கிறது.

11.எழுவினா 4 ற்கான தீர்வு

மேற்கண்டவாறு அலசி ஆராய்ந்து காணப்பட்ட தீர்வுகளின் அடிப்படையில் பிரதிவாதிக்கு வேறு எந்த பரிகாரமும் கிடைக்கக் கூடியதல்ல என எழுவினா 4-ற்கு விடைக் காணப்படுகிறது.

முடிவாக, இடைமனு எண்.1/2020 மற்றும் இம்மேல்முறையீட்டு வழக்கு எண்.62/2017 அனுமதிக்கப்பட்டு, திருச்சிராப்பள்ளி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கடந்த 09.03.2017 அன்று பிறப்பிக்கப்பட்ட அசல் வழக்கு எண்.1433/2013 தீர்ப்பு மற்றும் தீர்ப்பாணை பகுதியாக ரத்து செய்யப்பட்டு அசல் வழக்கை விசாரணை நீதிமன்றத்திற்கு கூடுதல் விசாரணைக்காக திருப்பப்படுகிறது.

2. மேற்படி வழக்கானது 10 வருடங்களுக்கு மேற்பட்ட வழக்கு என்பதால் விசாரணை நீதிமன்றம் இந்த வழக்கு கோப்புகள் கிடைக்கப்பெற்ற 3 மாத காலத்திற்குள் வழக்கு விசாரணையை முடிக்க வேண்டும் என உத்தரவிடப்படுகிறது.

4. தரப்பினர்களின் செலவுத் தொகையை அவரவர்களே ஏற்க வேண்டும். இருதரப்பினர்களும் விசாரணை நீதிமன்றத்தில் 01.06.2026 அன்று முன்னிலையாக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை, என்னால் சுருக்கெழுத்துத் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு, இன்று 2026-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 09-ஆம் நாள் வியாழக் கிழமை அவையறிய பகரப்பட்டது.

KANNAN Digitally signed by KANNAN Date: 2026.04.09 20:09:38 +0530

மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

இருதரப்பு சாட்சிகள் :- இல்லை

இருதரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

KANNAN Digitally signed by KANNAN Date: 2026.04.09 20:09:47 +0530

மூன்றாவது கூடுதல் சார்பு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.